# உயிர்வகை

1.தொல்காப்பியம் - குறிப்பு வரைக.

- தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்.
- மிகப் பழமையான இலக்கண நூலாகும்.
- தொல் காப்பு இயம் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.
- தமிழரின் தொன்மையைக் காத்து இயம்பும் நூல் என்று பொருள்படும்.
- எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களைக் கொண்டது.
- ஒவ்வொரு அதிகாரமும் 9 அதிகாரங்களாய் மொத்தம் 27 அதிகாரங்களைக் கொண்டது.
- பொருளதிகாரம் தமிழர்களின் வாழ்க்கை இலக்கணத்தைக் கூறும் நூலாகும்.

2.உயிர் வகை குறித்த செய்திகளைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

அல்லது

அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உதாரணம் |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல், | புல்,மரம் |
| ஈரறிவு | உற்றறிதல், சுவைத்தல், | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல் | நண்டு,தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் | மனிதன். |